(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 6 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2008, யூலை 08, செவ்வாய்க்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0012/ '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் இருபது பிரதான ஆறுகளையும் அவற்றின் நீளத்தையும்,

(ii) அவை ஒவ்வொன்றும் ஆரம்பிக்கும் மற்றும் முடிவடையும் இடங்களையும்,

(iii) அந்த ஆறுகள் ஊடறுத்துச் செல்லும் மாவட்டங்களையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இந்த ஆறுகள் மூலமாக பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஆரம்பிக்கப் பட்டுள்ள அபிவிருத்திச் செயற்பாடுகளையும்,

(ii) அணைக்கட்டின் மூலமாக மின்னுற்பத்தி ஆற்றல் அதிகரிக்கப்பட்டுள்ளதா அல்லது கமத்தொழில் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) அவ்வாறாயின், விவரங்களையும்,

(iv) இன்றேல் , அவற்றின் பயன் என்னவென்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0013/ '08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் தொழிற்பாட்டில் உள்ள தொலைக்காட்சி நிலையங்களின் எண்ணிக் கையையும்,

(ii) உரிமங்கள் வழங்கப்பட்டிருப்பினும் தொழிற்பாடு ஆரம்பிக்கப்படாதிருக்கும் தொலைக்காட்சி நிலையங்களுக்காக வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக் கையையும்

(iii) அவர்களது ஒளிபரப்பின் அலைவரிசையையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) உள்ளூர் திரைப்படக் கைத்தொழிலுக்கு உதவும் நோக்கத்துடன் வெளிநாட்டுத் தொலைக்காட்சித் திரைப்படங்கள் நாட்டிற்குள் கொண்டுவரப்படுவதை அதைரியப்படுத்துவதற்காக அரசாங்கம் வரிகளை அறிமுகம் செய்ததை அவர் அறிவாரா?

(இ) (i) அது தனது குறிக்கோளை அடைந்து விட்டதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், எங்கே, எவ்வாறு இப்பயன்கள் அடையப்பெற்றன என்பதையும்,

(iii) வரிகள் விதிக்கப்பட்டது முதல் இற்றைவரை ஒவ்வொரு நிலையத்தினாலும் செலுத்தப்பட்ட தொகையையும்

அவர் கூறுவாரா?

(ஈ) (i) இந்தத் தொலைக்காட்சி நிலையங்கள் மீது விதிக்கப்பட்ட ஏனைய வரிகளையும்,

(ii) கடந்த 12 மாதங்களில் அரசாங்கத்தினால் சம்பாதிக்கப்பட்ட தொகையை வெவ்வேறாகவும்

அவர் கூறுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0014/ '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 13 ஆவது பாராளுமன்றம் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் இறக்குமதி செய்யப்பட்ட குண்டு துளைக்காத வாகனங்களின் எண்ணிக்கையினையும்,

(ii) சீ. ஐ. எப். இற்காகவும் தீர்வைக்காகவும் செலுத்தப்பட்ட மொத்த செலவுத் தொகையினையும்,

(iii) அவ்வாறில்லையெனின், விலக்களிக்கப்பட்ட தீர்வையின் பெறுமதியினை யும்,

(iv) இக் கார் வண்டிகள் யாருக்கு ஒதுக்கப்பட்டன என்பதையும்,

(v) இப்பொழுது அவை யாருக்கு ஒதுக்கப்பட்டுள்ளன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) இக் கார் வண்டிகள் கேள்வி கோரலின் பின்னரா இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்,

(ii) எங்கிருந்து அவை இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்,

(iii) பணம் எங்கே செலுத்தப்பட்டது என்பதையும்,

(iv) பணம் ஒதுக்கப்பட்ட வரவு செலவுத் தலைப்பினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0192/ '08

4.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான (அமைச்சரவை அந்தஸ்தற்ற) அமைச்சர் ஒவ்வொருவரினதும் உத்தியோகபூர்வ அலுவலகங்கள் அரசாங்கக் கட்டிடங்களிலா தாபிக்கப்பட்டுள்ளன என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தனியார் நிறுவனமொன்றில் அல்லது தனியாருக்குரிய காணியொன்றில் அல்லது கட்டிடமொன்றில் குறித்த அலுவலகம் தாபிக்கப்பட்டிருப்பின் அவ்விடத்தில் முகவரி, உரிமையாளரின் முகவரி மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட திகதி யாது,

(ii) வாடகைக்கு, குத்தகைக்கு அல்லது வேறேதுமொரு அடிப்படையில் அலுவலகத்திற்குத் தேவையான இடவசதிகள் பெறப்பட்டிருப்பின் அதன் சதுர அடிகளுக்காக மாதாந்தம் மற்றும் வருடாந்தம் செலவிடப்படுகின்ற தொகை தனித்தனியாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) வாடகைக்கு, குத்தகைக்கு அல்லது வேறேதுமொரு அடிப்படையில் அலுவலகத்திற்குத் தேவையான இடவசதிகளைப் பெறும் பொருட்டு வைப்புத் தொகையொன்று வழங்கப்பட்டுள்ளதா,

(ii) ஆமெனில், அத்தொகை எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) அரசாங்கக் கட்டிடமொன்றில் குறித்த அலுவலகத்தைத் தாபிப்பதற்கு அவர் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா?

(உ) இன்றேல், ஏன்?

0193/ '08

5.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மத அலுவல்கள் (அமைச்சரவை அந்தஸ்தற்ற) அமைச்சரினது உத்தியோகபூர்வ அலுவலகம் அரசாங்கக் கட்டிடமொன்றிலா தாபிக்கப்பட்டுள்ளது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தனியார் நிறுவனமொன்றில் அல்லது தனியாருக்குரிய காணியொன்றில் அல்லது கட்டிடமொன்றில் குறித்த அலுவலகம் தாபிக்கப்பட்டிருப்பின் அவ்விடத்தில் முகவரி, உரிமையாளரின் முகவரி மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட திகதி யாது,

(ii) வாடகைக்கு, குத்தகைக்கு அல்லது வேறேதுமொரு அடிப்படையில் அலுவலகத்திற்குத் தேவையான இடவசதிகள் பெறப்பட்டிருப்பின் அதன் சதுர அடிகளுக்காக மாதாந்தம் மற்றும் வருடாந்தம் செலவிடப்படுகின்ற தொகை தனித்தனியாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

இ) (i) வாடகைக்கு, குத்தகைக்கு அல்லது வேறேதுமொரு அடிப்படையில் அலுவலகத்திற்குத் தேவையான இடவசதிகளைப் பெறும் பொருட்டு வைப்புத் தொகையொன்று வழங்கப்பட்டுள்ளதா,

(ii) ஆமெனில், அத்தொகை எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) அரசாங்கக் கட்டிடமொன்றில் குறித்த அலுவலகத்தைத் தாபிப்பதற்கு அவர் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா?

(உ) இன்றேல், ஏன்?

0194/ '08

6.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— பெற்றோலியம், பெற்றோலியவள அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பெற்றோலியவள (அமைச்சரவை அந்தஸ்தற்ற) அமைச்சரினது உத்தியோகபூர்வ அலுவலகம் அரசாங்கக் கட்டிடமொன்றிலா தாபிக்கப்பட்டுள்ளது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தனியார் நிறுவனமொன்றில் அல்லது தனியாருக்குரிய காணியொன்றில் அல்லது கட்டிடமொன்றில் குறித்த அலுவலகம் தாபிக்கப்பட்டிருப்பின் அவ்விடத்தில் முகவரி, உரிமையாளரின் முகவரி மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட திகதி யாது,

(ii) வாடகைக்கு, குத்தகைக்கு அல்லது வேறேதுமொரு அடிப்படையில் அலுவலகத்திற்குத் தேவையான இடவசதிகள் பெறப்பட்டிருப்பின் அதன் சதுர அடிகளுக்காக மாதாந்தம் மற்றும் வருடாந்தம் செலவிடப்படுகின்ற தொகை தனித்தனியாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

இ) (i) வாடகைக்கு, குத்தகைக்கு அல்லது வேறேதுமொரு அடிப்படையில் அலுவலகத்திற்குத் தேவையான இடவசதிகளைப் பெறும் பொருட்டு வைப்புத் தொகையொன்று வழங்கப்பட்டுள்ளதா,

(ii) ஆமெனில், அத்தொகை எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) அரசாங்கக் கட்டிடமொன்றில் குறித்த அலுவலகத்தைத் தாபிப்பதற்கு அவர் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா?

(உ) இன்றேல், ஏன்?

0321/ '08

7.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய மாகாண சபையின் முதலமைச்சருக்கு உத்தியோகபூர்வ வீடொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அந்த வீடு மாகாண சபைக்குரியதா அல்லது மத்திய அரசாங்கத்துக்குரியதா என்பதையும்,

(iii) அல்லது அது வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வீடா என்பதையும், மற்றும்

(iv) அந்த வீட்டின் உரிமையாளர் யார் என்பதையும், மாதாந்த வாடகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட முதலமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அந்த வாகனங்களின் இலக்கங்கள் மற்றும் வாகனங்கள் என்ன என்பதையும்,

(iii) அவை மாகாணசபைக்குரிய வாகனங்களா என்பதையும்,

(iv) அவ்வாறு இல்லாவிடின் அந்த வாகனங்களின் உரிமையாளரின் பெயர்களையும் மாதாந்த வாடகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) குறிப்பிட்ட முதலமைச்சரின் அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் இலக்கங்கள்,வகைகள் எவை என்பதையும்,

(ii) அந்த வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் யார் என்பதையும்,

(iii) அந்த வாகனங்கள் மாகாணசபைக்குரியதா அல்லது வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டதா என்பதையும்,

(iv) அவ்வாறெனின் அவற்றின் உரிமையாளர்கள் யார் என்பதையும் மாதாந்த வாடகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0322/ '08

8.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்தியமாகாண சபையின் சுகாதார அமைச்சருக்கு உத்தியோகபூர்வ வீடொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அந்த வீடு மாகாண சபைக்குரியதா அல்லது மத்திய அரசாங்கத்துக்குரியதா என்பதையும்,

(iii) அல்லது அது வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வீடா என்பதையும், மற்றும்,

(iv) அந்த வீட்டின் உரிமையாளர் யார் என்பதையும், மாதாந்த வாடகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அந்த வாகனங்களின் இலக்கங்கள் மற்றும் வகைகள் என்ன என்பதையும்,

(iii) அவை மாகாண சபைக்குரிய வாகனங்களா என்பதையும்,

(iv) அவ்வாறு இல்லாவிடின் அந்த வாகனங்களின் உரிமையாளரின் பெயர்களையும் மாதாந்த வாடகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) குறிப்பிட்ட சுகாதார அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்க ளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் இலக்கங்கள், வகைகள் எவை என்பதையும்,

(ii) அந்த வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் யார் என்பதையும்,

(iii) அந்த வாகனங்கள் மாகாண சபைக்கு உரியதா அல்லது வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டதா என்பதையும்,

(iv) அவ்வாறெனின் அவற்றின் உரிமையாளர்கள் யார் என்பதையும் மாதாந்த வாடகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0323/ '08

9.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மகாவலி ‘ பீ ’ வலயத்தில் வெலிகந்த பிரதேச செயலகப் பிரிவில் காணிகளைப் பகிர்ந்தளிப்பதற்காக 2003 ஆம் ஆண்டு காணிக் கச்சேரி நடத்தப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்தக் காணிகளைப் பகிர்ந்தளிப்பதற்காக காணிக் கச்சேரி நடத்துவது நீதிமன்ற கட்டளைப்படி தடைசெய்யப்பட்டது என்பதையும்,

(ii) அவ்வாறிருந்தும் அரசியல் நட்பின் மீது வர்த்தக அடிப்படையில் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) 2005 - 2006 ஆம் ஆண்டுகளில் இப்பிரதேசத்தில் வர்த்தக காணிகளைப் பெற்றுக் கொண்டவர்களின் பெயர்ப் பட்டியலொன்றை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0382/ '08

10.

கௌரவ அசல ஜாகொடகே,— விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சம்பந்தப்பட்ட அமைச்சின்கீழ் நிறுவப்பட்டுள்ள விதாதா வள நிலையங் களின் எண்ணிக்கை யாது,

(ii) அவை நிறுவப்பட்ட திகதிகள் மற்றும் நிறுவப்பட்டுள்ள பிரதேச செயலகப் பிரிவுகள் யாவை,

(iii) தற்போது இயங்கி வருகின்ற மற்றும் இயங்காத நிலையங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி விதாதா நிலையங்களில் சேவைக்காக சேர்த்துக் கொள்ளப்பட்டுள் ளோரின் எண்ணிக்கை யாது,

(ii) மேற்படி பதவிகளுக்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட திகதிகள் மற்றும் ஏற்புடைய சம்பளம் எவ்வளவு,

(iii) இவர்களைப் பதவியில் நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா,

(iv) ஆமெனில், அது எப்போது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0383/ '08

11.

கௌரவ அசல ஜாகொடகே,— சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007 ஆம் ஆண்டில் மேற்படி அமைச்சரின் அமைச்சிற்கு அல்லது அதன் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அல்லது வேறு நிறுவனங்களுக்கு புதிதாக சிலர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளார்களா என்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட் டுள்ள வர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(ii) ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(iii) இவர்களில், சேவையில் நிரந்தரமாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் பட்டதாரிகளின் எண்ணிக்கை ஆகியவற்றை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

1.

பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும் தெரிவு

[6(2) ஆம் இலக்க நிலைளயியற் கட்டளை]

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

2.

நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமான சேவைகள் அமைச்சருமானவர்,— குடியியல் வான்செலவு,— குடியியல் வான்செலவினதும் தொடர்பான கருமங்களினதும் ஒழுங்குபடுத்துகைக்கும் கட்டுப்பாட்டுக்கும் ஏற்பாடு செய்வதற்கும், சர்வதேசக் குடியியல் வான்செலவு சமவாயத்துக்குப் பயன்கொடுப்பதற்கும், அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்டவையும் அவற்றின் இடைநேர்விளைவான வையுமான கருமங்களுக்குமானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்

3.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினின்றும் விலக்குப்பெறுமாக.

4.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2008.06.05 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரை இருக்குமான. பி.ப. 4.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

5.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— ஆலோசனைக்குழுக்களும் சட்டவாக்க நிலையியற் குழுக்களும்,—

(அ) கீழ்க்கண்டவாறு ஐம்பத்து ஐந்து (55) ஆலோசனைக்குழுக்கள் நியமிக்கப் படுமாக:-

1. மத அலுவல்கள், ஒழுக்க மேம்பாடு பற்றிய ஆலோசனைக்குழு.
2. பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய ஆலோச னைக்குழு.
3. நிதி, திட்டமிடல் பற்றிய ஆலோசனைக்குழு.
4. தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக்குழு.
5. உள்ளக நிருவாகம் பற்றிய ஆலோசனைக்குழு.
6. பெருந்தோட்டக் கைத்தொழில் பற்றிய ஆலோசனைக்குழு.
7. நீதி, சட்டமறுசீரமைப்பு பற்றிய ஆலோசனைக்குழு.
8. சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக்குழு.
9. துறைமுகங்கள், விமான சேவைகள் பற்றிய ஆலோசனைக்குழு.
10. பெற்றோலியம், பெற்றோலியவள அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக்குழு.
11. நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக்குழு.

12. கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் பற்றிய ஆலோசனைக்குழு.
13. கல்வி பற்றிய ஆலோசனைக்குழு.
14. பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் பற்றிய ஆலோசனைக்குழு.
15. இளைஞர் வலுவூட்டுகை, சமூக பொருளாதார அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக்குழு.
16. தபால், தொலைத்தொடர்புகள் பற்றிய ஆலோசனைக்குழு.
17. நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக்குழு.
18. சமூக சேவைகள், சமூக நலனோம்புகை பற்றிய ஆலோசனைக்குழு.
19. வீடமைப்பு, பொதுவசதிகள் பற்றிய ஆலோசனைக்குழு.
20. சமூக அபிவிருத்தி, சமூக அநீதி ஒழிப்பு பற்றிய ஆலோசனைக்குழு.
21. நீர் வழங்கல், வடிகாலமைப்பு பற்றிய ஆலோசனைக்குழு.
22. விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக்குழு.
23. அரசியலமைப்பு அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு பற்றிய ஆலோசனைக் குழு.
24. மீள் குடியமர்த்துகை, அனர்த்த நிவாரண சேவைகள் பற்றிய ஆலோசனைக் குழு.
25. திட்டச் செயற்படுத்துகை பற்றிய ஆலோசனைக்குழு.
26. துணைப்பயிர் அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக்குழு.
27. பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய ஆலோசனைக்குழு.
28. ஏற்றுமதி அபிவிருத்தி, சர்வதேச வர்த்தக அலுவல்கள் பற்றிய ஆலோசனைக் குழு.
29. மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக்குழு.
30. சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் வலுவூட்டுகை பற்றிய ஆலோசனைக்குழு.
31. தொழில் முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு பற்றிய ஆலோசனைக் குழு.
32. மக்கள் தோட்ட முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக்குழு.
33. காணி, காணி அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக்குழு.
34. இளைஞர் அலுவல்கள் பற்றிய ஆலோசனைக்குழு.
35. மக்கள் தொடர்பாடல், தகவல் பற்றிய ஆலோசனைக்குழு.
36. சுதேச மருத்துவத்துறை பற்றிய ஆலோசனைக்குழு.
37. தொழில் உறவுகள், மனிதவலு பற்றிய ஆலோசனைக்குழு.
38. விளையாட்டுத்துறை, பொதுப்பொழுதுபோக்கு பற்றிய ஆலோசனைக்குழு.
39. வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் பற்றிய ஆலோசனைக்குழு.
40. அனர்த்த முகாமைத்துவ, மனித உரிமைகள் பற்றிய ஆலோசனைக்குழு.
41. நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் பற்றிய ஆலோசனைக்குழு.
42. சுற்றுலாத்துறை பற்றிய ஆலோசனைக்குழு.

43. வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை பற்றிய ஆலோசனைக்குழு.

44. வாழ்க்கைத்தொழில், தொழிற்பயிற்சி பற்றிய ஆலோசனைக்குழு.

45. கிராமியக்கைத்தொழில், சுயதொழில் ஊக்குவிப்பு பற்றிய ஆலோசனைக்குழு.

46. உள்ளூராட்சி, மாகாணசபைகள் பற்றிய ஆலோசனைக்குழு.

47. கடற்றொழில், நீரகவளமூலங்கள் பற்றிய ஆலோசனைக்குழு.

48. கால்நடைவள அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக்குழு.

49. வெளிநாட்டு அலுவல்கள் பற்றிய ஆலோசனைக்குழு.

50. கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் பற்றிய ஆலோசனைக்குழு.

51. உயர்கல்வி பற்றிய ஆலோசனைக்குழு.

52. நீர்ப்பாசன, நீர்முகாமைத்துவம் பற்றிய ஆலோசனைக்குழு.

53. கைத்தொழில் அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக்குழு.

54. போக்குவரத்து பற்றிய ஆலோசனைக்குழு.

55. சுற்றாடல், இயற்கைவளங்கள் பற்றிய ஆலோசனைக்குழு.

109 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் பிரகாரம் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும் விடயங்கள் தொடர்பில் பரிசீலனை செய்து அறிக்கையிடும் பொருட்டு ஒவ்வோர் ஆலோசனைக் குழுவும் ஐந்து (5) பேருக்குக் குறையாததும் முப்பத்தியொ்ரு (31) பேருக்கு விஞ்சாததுமான உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

ஒவ்வோர் ஆலோசனைக் குழுவும் கூட்டநடப்பெண்ணாக மூன்று (3) உறுப்பினர் களைக் கொண்டிருக்குமாக.

(ஆ) முறையே “ஏ” நிலையியற்குழு மற்றும் “பீ” நிலையியற்குழு என்றழைக்கப்படும் இரண்டு சட்டவாக்க நிலையியற்குழுக்கள் நியமிக்கப் படுமாக.

ஒவ்வொரு குழுவும் முப்பத்தியொரு (31) உறுப்பினர்களைக் கொண்டிருப்பதோடு ஏதேனுமொரு குறித்த சட்டமூலமொன்று பரிசீலனைக்கு விடப்படுமிடத்து மேலதிகமாக பதினைந்து (15) உறுப்பினர்களுக்கும் விஞ்சாத எண்ணிக்கையினை ஒவ்வொரு குழுவுக்கும் நியமிப்பதற்கு சபாநாயகர் அதிகாரமுடையவராக இருப்பாராக.

ஒவ்வொரு குழுவும் கூட்ட நடப்பெண்ணாக ஏழு (7) உறுப்பினர்களைக் கொண்டிருக் குமாக.

6.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— சபைக்குழு,— 122 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் சபைக்குழுவானது சபாநாயகரைத் தவிசாளராகவும் தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் மேலும் முப்பத்தியொரு (31) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

7.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— நிலையியற் கட்டளைகள் பற்றிய குழு,— 123 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் நிலையியற் கட்டளைகள் பற்றிய குழுவானது சபாநாயகரைத் தவிசாளராகவும் பிரதிச்சபாநாயகர், குழுக்களின் பிரதித்தவிசாளர் மற்றும் தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் மேலும் முப்பத்தியொரு (31) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

8.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு,— 124 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவானது சபாநாயகரைத் தவிசாளராகவும் பிரதிச்சபாநாயகர், குழுக்களின் பிரதித்தவிசாளர், பாராளுமன்றச் சபைமுதல்வர், எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான், எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் மற்றும் தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் மேலும் முப்பத்தியொரு (31) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

9.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— அரசாங்க கணக்குகள் பற்றிய குழு,— 125 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவானது தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் முப்பத்தியொரு (31) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

10.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பொது முயற்சிகள் பற்றிய குழு,— 126 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் பொது முயற்சிகள் பற்றிய குழுவானது தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் முப்பத்தியொரு (31) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

11.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— சிறப்புரிமைகள் பற்றிய குழு,— 127 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் சிறப்புரிமைகள் பற்றிய குழுவானது தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் முப்பத்தியொரு (31) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

12.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பொது மனுக்கள் பற்றிய குழு,— 128 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் பொது மனுக்கள் பற்றிய குழுவானது தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் முப்பத்தியொரு (31) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

13.

கௌரவ பியசிறி விஜேநாயக்க,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:—

“அமைச்சுக்கள், மாகாண சபைகள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், நியதிச்சட்ட நிறுவனங்கள், அரச கம்பனிகள், அரசுக்குச் சொந்தமான தொழில்துறை நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு பணியாட்டெகுதியினரை ஆட்சேர்த்தல் தொடர்பாகவும் அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்”

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரேரணை,— 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட (40 ஆம் அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியவர்களால் மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் 2008 யூலை மாதம் 02 ஆம் திகதியிலிருந்து இலங்கையெங்கனும் நடைமுறைப் படுத்திக்கொண்டு செய்யப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*2.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— தரைப்படைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரை யுடன் சேர்த்து வாசிக்கப்படும் (357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டத்தின் 155 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2008 ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதிய 1543/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*3.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— உற்பத்திவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்திவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரால் உற்பத்திவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 மார்ச் மாதம் 14 ஆந் திகதிய 1540/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*4.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்ரில் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*5.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 24(ஈ)(2) ஆம் பிரிவின் கீழ் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் இறைவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்ரில் மாதம் 22 ஆந் திகதிய 1546/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*6.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 23 (1) (இ) ஆம் பிரிவின் கீழ் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் இறைவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்ரில் மாதம் 22 ஆந் திகதிய 1546/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*7.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 212 ஆம் பிரிவின் கீழ் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் இறைவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்ரில் மாதம் 22 ஆந் திகதிய 1546/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*8.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்ரில் மாதம் 22 ஆந் திகதிய 1546/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*9.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் முத்திரைக் கட்டண தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்ரில் மாதம் 22 ஆந் திகதிய 1546/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*10.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— பொருளாதாரச் சேவைக்கட்டணச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவைக்கட்டணச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் பொருளாதாரச் சேவைக்கட்டணம் தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்ரில் மாதம் 22 ஆந் திகதிய 1546/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*11.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத் தின்

கீழான தீர்மானம் (இல.1),— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 26 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீ கரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 26

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 25002 ஆம் இலக்க செயற்பாட்டு விடயம் “பிற அரசாங்கத்தின் சார்பில் கொடுப்பனவுக்கான முற் பணங்கள்” — அரச கணக்குகள் திணைக்களம் என்பதற்கெதிராக குறித்துரைக்கப் பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப் பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப் பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூ.5,300,000 இலிருந்து ரூ. 4,900,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக் கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல்V இல் குறித்துரைக் கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்பட வில்லை.

(இக்கட்டளை 2007.12.31. ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்)

ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ
நிதி, திட்டமிடல் அமைச்சர்

2008.02.22
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*12.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.2),— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 35 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 35

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம்

அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 31003 ஆம் இலக்க செயற்பாட்டு விடயம் "அரசாங்கத் தொழிற்சாலை செய்து முடிக்கப்பட்ட வேலை முற்பணக்கணக்கு — அரசாங்கத் தொழிற்சாலை என்பதற்கெதிராக குறித்துரைக் கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூ.140,000,000 இலிருந்து ரூ. 275,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — மீளாய்வு செய்யப்பட வில்லை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்பட வில்லை.

(இக்கட்டளை 2007.12.31. ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்)

ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ
நிதி, திட்டமிடல் அமைச்சர்

2008.04.21
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*13.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.3),— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்ட த்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங் கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 36 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 36

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 31002 ஆம் இலக்க செயற்பாட்டு விடயம் "அரசாங்கத் தொழிற்சாலை பண்டகசாலை முற்பணக் கணக்கு — அரசாங்கத் தொழிற்சாலை என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக் கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூ. 45,000,000 இலிருந்து ரூ. 135,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப் பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — மீளாய்வு செய்யப்பட வில்லை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக் கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக் கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்பட வில்லை.

(இக்கட்டளை 2007.12.31. ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்)

ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ
நிதி, திட்டமிடல் அமைச்சர்

2008.04.21
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*14.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத் தின் கீழான தீர்மானம் (இல.4),— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 38 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 38

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 01602 ஆம் இலக்க செயற்பாட்டு விடயம் "இலஞ்சம் அல்லது ஊழல் சார்த்துரைகளை விசாரிப் பதற்கான ஆணைக்குழு — இலஞ்சம் வாங்குபவர்களை கைது செய்வதற்கான முற்பணக்கணக்கு" என்பதற்கெதிராக குறித்து ரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப் பட்ட செலவின் உச்ச எல்லை — ரூ.3,000,000 இலிருந்து ரூ. 6,500,000 வரை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப் பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூ. 800,000 இலிருந்து ரூ. 2,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக் கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக் கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்பட வில்லை.

(இக்கட்டளை 2007.12.31. ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்)

ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ
நிதி, திட்டமிடல் அமைச்சர்

2008.04.30
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*15.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத் தின் கீழான தீர்மானம் (இல.5),— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 13 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

**2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின்**
**8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 13**

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 23202 ஆம் இலக்க செயற்பாட்டு விடயம் “சிறைச்சாலைகள் திணைக்களத்தின் விவசாயம், கைத் தொழில் கணக்குகள்” — சிறைச்சாலைத் திணைக்களம் என்பதற்கெதிராக குறித் துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப் பட்ட செலவின் உச்ச எல்லை — ரூ.65,000,000 இலிருந்து ரூ. 75,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப் பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூ. 66,000,000 இலிருந்து ரூ. 76,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக் கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை — ரூ. 30,000,000 இலிருந்து ரூ. 31,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக் கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2007.12.31. ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்)

ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ
நிதி, திட்டமிடல் அமைச்சர்

2008.05.05
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*16.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத் தின் கீழான தீர்மானம் (இல.6),— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 39 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 39

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க செயற்பாட்டு விடயம் "அச்சிடுதல், பிரச்சாரம் மற்றும் வினியோகம்" — கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூ.1,300,000,000 இலிருந்து ரூ. 2,398,400,000 வரை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூ. 1,300,000,000 இலிருந்து ரூ. 2,264,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை — ரூ. 600,000,000 இலிருந்து ரூ. 800,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூ.150,000,000 இலிருந்து ரூ.1,490, 000,000 வரை.

(இக்கட்டளை 2007.12.31. ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்)

ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ
நிதி, திட்டமிடல் அமைச்சர்

*17.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச்சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 7),— 2006ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08 ஆம் பிரிவினால் தமக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழ்க்காணும் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட கட்டளைகள் இத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது.

(இக்கட்டளைகள் 2008.12.31 ஆம் திகதிவரை மட்டுமே செல்லுபடியாகும்)

# அட்டவணை

*2007 நிதி ஆண்டு தொடர்பில் 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சினால் அதிகாரமளிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கான முற்பணங்கள் சம்பந்தமான முற்பணக் கணக்குகளின் எல்லைகளின் மாற்றங்களின் அட்டவணை*

| தொடர் இல. | அமைச்சு / திணைக்களம் | விடய இல. | பந்தி ii இல் உள்ள செலவினத்தின் உச்ச எல்லைகள் | | பந்தி iii இல் உள்ள தொகைகளின் இழிவெல்லைகள் | | பந்தி iv இல் உள்ள பற்று மீதியின் உச்ச எல்லைகள் | | கட்டளை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | இருந்து | ஆக | இருந்து | ஆக | இருந்து | ஆக | |
| 1. | பொலிஸ் திணைக்களம் | 22501 | 1,225,000,000 | 1,145,000,000 | 698,160,000 | 663,160,000 | 3,150,000,000 | 2,918,000,000 | 1 |
| 2. | பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு சட்டமும் ஒழுங்கும் அமைச்சர் | 10301 | 42,000,000 | 122,000,000 | 17,880,000 | 52,880,000 | 150,000,000 | 390,000,000 | 2 |
| 3. | பதிவாளர் நாயகம் திணைக்களம் | 25401 | - | - | - | - | 70,000,000 | 135,000,000 | 5 |
| 4. | மாவட்டச் செயலாளர், கச்சேரி யாழ்ப்பாணம் | 26401 | - | - | 15,720,000 | 14,000,000 | - | - | 6 |
| 5. | விவசாயத் திணைக்களம் | 28501 | - | - | 97,320,000 | 86,000,000 | - | - | 7 |
| 6. | பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் | 15501 | - | - | 6,120,000 | 1,500,000 | - | - | 8 |
| 7. | வனவளத் திணைக்களம் | 28301 | - | - | 28,920,000 | 23,100,000 | - | - | 9 |
| 8. | காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் | 15301 | - | - | 840,000 | 5,600,000 | 14,000,000 | 25,962,000 | 10 |
| 9. | ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் | 28901 | - | - | 13,560,000 | 13,200,000 | - | - | 11 |
| 10. | கல்வி அமைச்சர் | 12601 | - | - | 516,000,000 | 475,000,000 | - | - | 12 |
| 11. | மாவட்டச் செயலகம், காலி | 26101 | - | - | 44,520,000 | 33,000,000 | - | - | 14 |
| 12. | இலங்கை இராணுவம் | 22201 | - | - | 921,000,000 | 800,000,000 | - | - | 15 |
| 13. | இலங்கை புகையிரத திணைக்களம் | 30601 | - | - | - | - | 1,765,000,000 | 1,865,000,000 | 16 |
| 14. | நில அளவைத் திணைக்களம் | 28801 | - | - | 78,120,000 | 72,000,000 | - | - | 17 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15. | இளஞர் விவகார அமைச்சு | 15601 | - | - | - | - | 6,000,000 | 18,000,000 | 18 |
| 16. | பொலிஸ் திணைக்களம் | 22501 | - | - | 663,160,000 | 600,000,000 | - | - | 19 |
| 17. | உள்நாட்டலுவல்கள் அமைச்சர் | 14701 | - | - | - | - | 8,000,000 | 12,000,000 | 20 |
| 18. | மாவட்டச் செயலகம் , அநுராதபுரம் | 27401 | - | - | 31,920,000 | 25,000,000 | - | - | 21 |
| 19. | தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் | 13101 | - | - | 1,000,000 | 200,000 | - | - | 22 |
| 20. | இலங்கை கடற்படை | 22301 | - | - | 208,920,000 | 150,000,000 | - | - | 23 |
| 21. | மாவட்டச் செயலகம், அம்பாறை | 27001 | - | - | - | - | 65,000,000 | 129,000,000 | 24 |
| 22. | மாவட்டச் செயலகம், மாத்தறை | 26201 | - | - | 30,780,000 | 29,000,000 | - | - | 25 |
| 23. | உணவு ஆணையாளர் திணைக்களம் | 30001 | - | - | 8,400,000 | 7,000,000 | - | - | 27 |
| 24. | இலங்கை வான்படை | 22401 | - | - | 235,560,000 | 220,000,000 | - | - | 28 |
| 25. | வியாபாரத் தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் | 24401 | - | - | - | - | 4,000,000 | 6,500,000 | 29 |
| 26. | கிராமிய வாழ்வாதார அபிவிருத்தி அமைச்சர் | 15901 | - | - | - | - | 50,000,000 | 65,000,000 | 30 |
| 27. | தெங்கு அபிவிருத்தி அமைச்சர் | 14101 | - | - | 840,000 | 500,000 | - | - | 31 |
| 28. | பொதுமக்கள் பாதுகாப்பு திணைக்களம் | 32001 | - | - | 192,000 | 96,000 | - | - | 32 |

ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ

நிதி, திட்டமிடல் அமைச்சர்

2008 மே 09 ஆம் திகதி

கொழும்பு - 01

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டது)

*18.

சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 160, நிகழ்ச்சித்திட்டம் 2,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங் கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் பதினெட்டுக் கோடியே எண்பது இலட்சம் (ரூபா 188,000,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு 160 — | சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சு | | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — | அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| கருத்திட்டம் 3 (24) | — | வனவளங்கள் முகாமைத்துவ கருத்திட்டம் | |
| | மீண்டுவரும் செலவினம் | ரூ. | |
| | மூலதனச் செலவினம் | ரூ. | 188,000,000 |
| | மொத்தம் | ரூ. | **188,000,000** |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2008, யூன் மாதம் 05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.

2008.05.16
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*19.

சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 160, நிகழ்ச்சித்திட்டம் 01,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங் கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் நூற்றி முப்பது மில்லியன் (ரூபா 130,000,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு 160 | — | சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சு | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் 01 | — | செயல்முறைச் செயற்பாடுகள் | |
| கருத்திட்டம் 02 | — | நிருவாகமும் தாபனச் செலவுகளும் | |
| செலவு விடயம் 2104 | — | கட்டிடங்களும் கட்டமைப்புகளும் | |
| | | மீண்டுவரும் செலவினம் | —— |
| | | மூலதனச் செலவினம் | 12,700,000 |
| | | மொத்தம் | 12,700,000 |
| செலவு விடயம் 2105 | — | காணி, காணி அபிவிருத்தி | |
| | | மீண்டுவரும் செலவினம் | —— |
| | | மூலதனச் செலவினம் | 117,300,000 |
| | | மொத்தம் | **117,300,000** |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2008, யூன் மாதம் 20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப்பார்க்க. இலக்கம் 01 குறைநிரப்பு மதிப்பீட்டின் மொத்தம் ரூபா 188,000,000.

*20.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*21.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*22.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (சிறப்பேற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*23.

பாடசாலை ஆசிரியர் ஓய்வூதிய(திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*24.

கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*25.

சீன வம்சாவழியினரான ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்கல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்,— இரண்டாம் மதிப்பீடு

*26.

இலங்கை கடன் தகவல் பணியக (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*27.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*28.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*29.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*30.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*31.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*32.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*33.

பிரதம அமைச்சரும், உள்ளக நிர்வாக அமைச்சரும், பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறிவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்பு ரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2008 சனவரி மாதம் 09 ஆம் திகதிய 1531/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்டதும் 2008.03.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக் கப்படுமாக.

*34.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான "2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை (தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்" அங்கீகரிக்கப்படுமாக.

*35.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— "(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச்

சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*36.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007 ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*37.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— காவற்றூதுப் பணிகள் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— 1981 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, காவற்றூதுப் பணிகள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், வெளிநாட்டலுவல்கள் அமைச்சரால் காவற்றூதுப் பணிகளுக்கான அறவீடு தொடர்பில் ஆக்கப்பட்டு 2007 யூன் மாதம் 11 ஆந் திகதிய 1501/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

*38.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும், பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்க ளுக்கும் செலுத்தப்படும் மாதாந்தப் படி, அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 1/3 க்குச் சமமான ஒரு படியாக இருக்க வேண்டுமெனவும், அது 2007 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேர ணைகளினால் தீர்மானிக்கப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இந்தப் பிரேரணை யினால் தீர்மானிக்கப்படும் படியானது பதிலீடு செய்யப்படவேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*39.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல. 2),— 2002.01.28 ஆம் திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள், அரசியலமைப்பின் பதினேழாவது சீர்திருத்தத்தின் 27 (2) ஆம் பிரிவின் கீழ் 2002.01.29 ஆந் திகதியிலிருந்து குறித்த பதவிக்கு மீள நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, அரசாங்க சேவையில் மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திருத்தங்களின் வண்ணம், தேர்தல் ஆணையாளரின் சம்பளம் 2006.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டது, எனினும், செயலாளர் பிரமாணக் குறிப்பின் கீழ் இந்தப் பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்வது தொடர்பாக குறித்த சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப் படவில்லை

யாதலால், தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள் மீள சேவைக்கு அமர்த்தப்பட்ட 2002.01.29 ஆம் திகதியிலிருந்து பதவி வகிக்கும் வரையான காலத்திற்குரிய சம்பள ஏற்ற பெறுமானங்களையும் சம்பளத்துடன் சேர்த்து வழங்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*40.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் ஊதியமும், படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்த ஊதியம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் , அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும், உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியமும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட ஊதியமும், படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஊதியமும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*41.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— அரசியலமைப்பின் 155அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் கொடுப்பனவுகளும், படிகளும் 2006. 01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவில் (எரிபொருள் படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்தக் கொடுப்பனவு 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் , தேசிய பொலிசு ஆணைக்குழுவின், தவிளாசருக்கும், உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத் தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளும், படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக் கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*42.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பந்தியின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் சம்பளங்களும், படிகளும் 2006. 01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டு மென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 66,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 80,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | | ரூ. 77,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும், உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளமும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளமும், படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*43.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க,

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் சம்பளங்களும், படிகளும் 2006. 01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது.

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் , இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கும், உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும், படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*44.

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சர்,— இலங்கை அரச பொறி யியல் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை - 2004,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின 14(3) ஆம் பிரிவின் கீழ், 2006.07.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2004 ஆம் ஆண்டிற்கான இலங்கை அரச பொறியியற் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை, ஐந்தொகை, இறுதி அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வீடமைப்பு, நிர்மாணத்துறை பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது.)

*45.

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சர்,— நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2005,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவின் கீழ், 2006.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2005 ஆம் ஆண்டிற்கான நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் ஆண்டறிக்கை, இறுதி அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது.)

46.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

47.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

48.

மகாவலி கலாசார மன்ற நம்பிக்கைப்பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

49.

றங்கா கலை நிறுவனத்தைக் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0411/ '08

1.

கௌரவ பியசிறி விஜேநாயக்க,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுகாதாரத் திணைக்களத்திற்கு 2004, 2005 மற்றும் 2006 ஆண்டுகளில் தாதிமார், துணை மருத்துவச் சேவை உத்தியோகத்தர்கள், கனிஷ்ட பணியாட்தொகுதி ஊழியர்கள் மற்றும் வாட் எழுதுவினைஞர்கள் ஆகியோர் ஆட்சேர்க்கப்பட்டனரா?

(ii) அத்தகைய ஆட்சேர்ப்புகள் மேற்படி ஒவ்வொரு வருடத்திற்கும் ஏற்ப தனித்தனியாக எவ்வளவு?

(iii) வாட் எழுதுவினைஞர் பதவிக்கு 2004, 2005, மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களின் நிரந்தர வசிப்பிடங்கள் எந்த மாவட்டங்களில் உள்ளன?

(iv) அத்தகைய நபர்கள் வசிக்கின்ற பிரதேச செயலாளர் பிரிவுகள், அவர்களது முகவரிகள் மற்றும் உத்தியோக ரீதியிலான முகவரிகள் யாவை?

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கனிஷ்ட பணியாட்தொகுதிக்கு 2004, 2005, மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் எந்தப் பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்பட்டனரென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அத்தகைய பதவிகள் நிரந்தரமானவையா, தற்காலிகமானவையா, அமய அடிப்படையிலானவையா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) அவ்வாறு சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களுடைய நிரந்தர வசிப்பிட மாவட்டம், பிரதேச செயலாளர் பிரிவு? வசிப்பிட முகவரிகள் மற்றும் தற்போதைய

உத்தியோக ரீதியிலான முகவரிகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) (i) மேற்படி ஆட்சேர்ப்புகளின் பொருட்டு உரிய ஆட்சேர்ப்பு நடைமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டனவா?

(ii) ஆமெனில், அவை யாவை?

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஊ) இன்றேல், ஏன்?